## கண்டறியப்பட்டு மாசுபாடு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

# நெய்வேலி




### ஆதண்டார்கொல்லை நிலத்தடி நீர்

| 55.845 | 26 | 40.078 | 20 | 54.93804 | 25 |
|---|---|---|---|---|---|
| **Fe** | | **Ca** | | **Mn** | |
| இரும்பு | | கால்சியம் | | மாங்கனீசு | |
| 762.5 | 1.83 | 589.8 | 1.00 | 717.3 | 1.55 |

ஃபுளூரைடு | TDS | கடினத்தன்மை

அனைத்தும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம்

குடிநீர்த்தேவைக்காக பயன்படுகிறது.

பிரச்சினைகள்:

**எலும்பு மற்றும் பற்கள் பாதிப்பு**

(Source: WHO)



### என்.எல்.சி. குழாய் நீர் (NLC நிர்வாகம் விநியோகிக்கும் குடிநீர்), வடலூர் கிராமம்

| 26.98153 | 13 |
|---|---|
| **Al** | |
| அலுமினியம் | |
| 577.5 | 1.61 |

அலுமினியம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம்

குடிநீர்த்தேவைக்காக பயன்படுகிறது.

பிரச்சினைகள்:



**சிறுநீரகம் மற்றும் தோல் சார்ந்த நோய்கள்**

### நெய்வேலி புதிய அனல்மின் நிலையத்திலிருந்து 1 கிமீ தொலைவில் உள்ள வயல்வெளி (மண் மாதிரி)

| 58.6934 | 28 | 63.546 | 29 | 65.38 | 30 |
|---|---|---|---|---|---|
| **Ni** | | **Cu** | | **Zn** | |
| நிக்கல் | | செம்பு | | துத்தநாகம் | |
| 737.1 | 1.88 | 745.5 | 1.90 | 906.4 | 1.65 |

அனைத்தும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம்

பிரச்சினைகள்:

பயிர் இழப்பு, மண் சீர்கேடு, விளைச்சல் குறைவு

### வெள்ளாளன்குளம் நிலத்தடி நீர்

| 65.38 | 30 |
|---|---|
| **Zn** | |
| துத்தநாகம் | |
| 906.4 | 1.65 |

துத்தநாகம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம்

குடிநீர்த்தேவைக்காக பயன்படுகிறது.

பிரச்சினைகள்:

**சிறுநீரகம் சார்ந்த நோய்கள்**

Source: “POWERing Pollution” The Environmental Impacts of Thermal Power Stations and Mining Operations in Neyveli and Parangipettai

கண்டறியப்பட்டு மாசுபாடு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

# நெய்வேலி

## தொல்காப்பியர் நகர்

குடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிலத்தடி நீர்

200.59 80
Hg
பாதரசம்
1007.1 2.00

பாதரசம் அனுமதிக்கப்பட்டதை விட
**250**
மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

சுவாசித்தால் உயிருக்கு ஆபத்து.
செரிமானம், நரம்பு மண்டலப் பிரச்சினைகள் ஏற்படும்.

## கரும்புத் தோட்டம், வடக்குவெள்ளூர் (மண் மாதிரி)

78.96 34
Se
செலினியம்
941 2.55

பாதரசம் அனுமதிக்கப்பட்டதை விட
**24.12**
மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

கரும்புப் பயிர்கள் போதிய வளர்ச்சி
இல்லாமல் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.



## நெய்வேலி புதிய அனல்மின் நிலையத்தின் வெளியேற்றம்

26.98153 13
Al
அலுமினியம்
577.5 1.61

அனுமதிக்கப்பட்டதை விட **3** மடங்கு அதிகம்


## வடக்குவெள்ளூர் பைபாஸ்(மண் மாதிரி)

78.96 34
Se
செலினியம்
941 2.55

பாதரசம் அனுமதிக்கப்பட்டதை விட
**23.56**
மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

வேளாண் உற்பத்தி குறைவு



## அய்யன் ஏரிக்கு அருகில் உள்ள வேளாண் நிலம்

51.9962 24
Cr
குரோமியம்
652.9 1.66

பாதரசம் அனுமதிக்கப்பட்டதை விட
**1.23**
மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

அதிக செறிவுமிக்க குரோமியம் இரைப்பை குடல் இரத்தப்போக்கு மற்றும் நுரையீரல் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

## நெய்வேலி அனல்மின் நிலையத்தின் வெளியேற்றம்

26.98153 13
Al
அலுமினியம்
577.5 1.61

அனுமதிக்கப்பட்டதை விட
**101.9**
மடங்கு அதிகம்

## வாலஜா ஏரி

26.98153 13
Al
அலுமினியம்
577.5 1.61

அனுமதிக்கப்பட்டதை விட
**53.6**
மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

மனிதர்களுக்கு அல்சைமர் பாதிப்பை உண்டாக்கும்
(US EPS Report 2013)

Source: “POWERing Pollution” The Environmental Impacts of Thermal Power Stations and Mining Operations in Neyveli and Parangipettai

## கண்டறியப்பட்டு மாசுபாடு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

# பரங்கிப்பேட்டை






### கரிக்குப்பம் நிலத்தடி நீர் மாதிரி

| | | |
|---|---|---|
| 55.845 26 **Fe** இரும்பு 762.5 1.83 | 40.078 20 **Ca** கால்சியம் 589.8 1.00 | 54.93804 25 **Mn** மாங்கனீசு 717.3 1.55 |
| ஃபுளூரைடு | கடினத்தன்மை | TDS |

அனைத்தும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம்

இந்த நீர் குடிக்க மற்றும் வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது



Source: "POWERing Pollution" The Environmental Impacts of Thermal Power Stations and Mining Operations in Neyveli and Parangipettai

## கண்டறியப்பட்டு மாசுபாடு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

### அனல்மின் நிலையத்துக்கு அருகில் உள்ள வேளாண் நிலம், கரிக்குப்பம் கிராமம்.

| |
|---|
| 10.811 5 **B** போரான் 800.6 2.04 |

அனுமதிக்கப்பட்டதை விட

**29.65**

மடங்கு அதிகம்

பிரச்சினைகள்:

**வேளான் பயிர் இழப்பு**



Source: "POWERing Pollution" The Environmental Impacts of Thermal Power Stations and Mining Operations in Neyveli and Parangipettai

101 வீடுகளில் நேர்காணல் செய்ததில்

# நெய்வேலி

**66 பேர்**

நிலத்தடி நீரின் தரம் குறைந்துள்ளதாகக் கூறினர்( சுவை மற்றும் மணம்). இதற்கு எரி சாம்பல் மாசு மற்றும் சுரங்க மாசு காரணம்.

**95 பேர்**

நிலக்கரி தூசு, எரி சாம்பல் காற்றில் பரவுவதாகக் கூறினர். இதற்கு புகைபோக்கி, நிலக்கரி கிடங்கு, சாம்பல் குட்டை, சுரங்கம் உள்ளிட்டவை காரணம்.

**89 பேர்**

சிறுநீரகம், தோல் மற்றும் சுவாசம் சார்ந்த நோய்கள் இருப்பதாகக் கூறினர்

**79 பேர்**

சாம்பல், நிலக்கரி தூசு போன்றவை தங்கள் வேளாண் நிலங்களில் படிந்திருப்பதாகக் கூறினர்.

**85 பேர்**

நோய் பாதிப்பு அடிக்கடி ஏற்படுவதாகத் தெரிவித்தனர். இதற்கு சாம்பல், நிலக்கரி தூசு, எரி சாம்பல் நீரில் கலப்பது காரணம்.

**59 பேர்**

பாசனத்திற்குப் பயன்படும் நீரின் தரம் குறைந்துள்ளதாகத் தெரிவித்தனர். இதில் 53 பேர் நிலக்கரி சுரங்கமும், அனல்மின் நிலையமுமே காரணம் எனக் கூறினர்.

**64 பேர்**

சிகிச்சைக்காக மருத்துவமனை வசதி இல்லை எனத் தெரித்துள்ளனர்.

Source: “POWERing Pollution” The Environmental Impacts of Thermal Power Stations and Mining Operations in Neyveli and Parangipettai

## ஆய்வு நடத்தப்பட்ட முறை

இந்த ஆய்வறிக்கை நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டது. கள ஆய்வுகள் 2022ஆம் ஆண்டு தொடங்கி 2023 ஏப்ரல் வரை நடைபெற்றது. முதல் கட்டமாக இப்பிரச்சினைகள் தொடர்பாக ஏற்கெனவே வெளியான அதிகாரப்பூர்வ அமைப்புகளின் ஆய்வறிக்கைகள், ஊடக மற்றும் பத்திரிகை செய்திகளும் ஆராயப்பட்டன. ஆதண்டார்கொல்லை, அகிலாண்டகங்காபுரம், கல்லுக்குழி, தென்குத்து, வானதிராயபுரம், வடக்குவெள்ளூர், தொப்பலிகுப்பம், கரிக்குப்பம், புதுக்குப்பம் ஆகிய கிராமங்களில் 121 வீடுகளில் நேரடியாக சென்று நேர்காணல் அடிப்படையில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்த கேள்விகள் எழுப்பி அதற்கான பதில்கள் பெற்றும் விவசாய அமைப்புகள் போன்ற குழுக்களிடம் மையப்படுத்தப்பட்ட குழு விவாதங்கள் நடத்தியும் தகவல்கள் பெறப்பட்டது. அடுத்தது இரண்டு கட்டங்களாக 37 இடங்களில் நீர் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட *Chennai Mettex Lab Pvt Ltd மற்றும் Tamilnadu Test House Pvt Ltd* எனும் இரண்டு பரிசோதனை நிறுவனங்களில் அவை சோதனை செய்யப்பட்டன.

## ஆய்வின் முடிவுகள்

### நெய்வேலி

பல குடிநீர் ஆதாரங்கள் அதிகளவு பாதரசம், செலினியம், ஃபுளூரைடு ஆகியவற்றால் கடுமையாக மாசுபட்டது கண்டறியப்பட்டது. முதற்சுற்று சோதனையில் ஆயவுக்குட்படுத்தப்பட்ட 20 இடங்களில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் 9 இடங்கள் *தீவிர* மாசடைந்திருந்தன, 9 இடங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாசடைந்திருந்தன. இரண்டாம் சுற்று ஆய்வில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 11 இடங்களில் 8 இடங்கள் *தீவிர*மாக மாசடைந்திருந்தன, 2 இடங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாசடைந்திருந்தன.

வடக்குவெள்ளூர், தொல்காப்பியர் நகரில், குடிப்பதற்காகவும் வீட்டுத்தேவைக்காகவும் பயன்படுத்தப்படும் நிலத்தடி நீரில் அனுமதிக்கப்பட்டதைவிட 250 மடங்கு அதிகமாக பாதரசம் கண்டறியப்பட்டது. மனித குலத்திற்குத் தெரிந்த மிகவும் நச்சான பொருள் பாதரசம் என்கிறது மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம்.

குடிநீரில் அதிக கலங்கல்தன்மை மற்றும் செலினியம் இருப்பது கண்டறியப்பட்டது. தொல்காப்பியர் நகர், வடக்குவெள்ளூரில் ஒரே தெருவில் வசிக்கும் பலருக்கு சிறுநீரக

பிரச்சினைகள், சுவாசம் மற்றும் தோல் பிரச்சினைகள் இருப்பதும் தெரியவந்தது. ஆழ்துளை நீரைக் குடிக்கும் பலருக்கு பற்களில் நிறமாற்றம் காணப்பட்டது.

சிறுநீரக நோய்கள், தோல் நோய்கள் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் பரவலாக உள்ளன, பலர் டயாலிசிஸுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அனல்மின் நிலையங்களில் இருந்து பறக்கும் சாம்பல், சுரங்கங்களில் இருந்து வரும் நிலக்கரி தூசி காற்றை மாசுபடுத்துவது, பறக்கும் சாம்பல் தண்ணீரில் கலப்பது மற்றும் என்.எல்.சி.யின் வெளியேற்றங்கள் தண்ணீரை மாசுபடுத்துவது ஆகிய 4 முக்கிய காரணங்களால் நோய்கள் ஏற்படுவதாக அங்கு வசிப்பவர்கள் கூறுகின்றனர்.

என்.எல்.சி.யின் சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையத்திலிருந்து நேரடியாக கழிவுகள் வெளியிடப்படும் 5 இடங்களில் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் கடுமையாக மாசடைந்திருந்தன. இந்த மாசின் அளவானது சுற்றுசூழல் பாதுகாப்புச் சட்ட வரம்புகளை மீறுவதாகவும் உள்ளன. என்.எல்.சி.யின் அனைத்து கழிவு வெளியேற்றங்கப் பகுதிகளில் இருந்தும் வெளியேறும் நீர் இறுதியில் இப்பகுதியில் உள்ள பிற உள்ளூர் நீரோடைகள் மற்றும் நீர்நிலைகளை மாசுபடுத்துவது கண்டறியப்பட்டது.

சுற்றுப்புற மேற்பரப்பு நீர்நிலைகளிள் எடுக்கப்பட்ட ஏழு மாதிரிகளையும் பரிசோதித்ததில் ஏழு மாதிரிகளும் மாசடைந்து அல்லது தீவிரமாக மாசடைந்ததாகக் கண்டறியப்பட்டது. நீர்நிலைகளில் இரும்பு, அலுமினியம், பாதரசம் கால்சியம், மெக்னீசியம், மாங்கனீசு மற்றும் நிக்கல் போன்ற கன உலோகங்கள் இருந்தன.

என்.எல்.சி.யின் அனல்மின் நிலையம் அருகே உள்ள விவசாய நிலங்களில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளில் நிக்கல், துத்தநாகம் மற்றும் தாமிரம் அதிக அளவில் இருந்தன. மண்ணில் அதிக அளவிலான கன உலோகங்கள் காணப்படுவதற்கு மண் மற்றும் பயிர்களில் படியும் எரி சாம்பலே காரணமாகும். பயிர் இழப்புக்கும், விளைச்சல் குறைவுக்கும், மண்ணின் தரம் கெட்டதற்கும் முக்கியக் காரணம் எரி சாம்பல் படிவதும் பாசன நீர் மாசடைவதுமே காரணம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**பரங்கிப்பேட்டை**

அனல்மின் நிலையத்திலிருந்து வெளியாகும மாசு பொதுமக்கள் குடிப்பதற்கும் வீட்டுத் தேவைக்காகவும் பயன்படுத்தும் நீரையும் நிலம் மற்றும் காற்றையும் மாசுபடுத்துகிறது. இது சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் உடல் நலத்தைப் பாதிப்பதோடு விளைச்சல் குறைவால் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது.

மிகவும் எளிதாகக் கண்டுணரக்கூடிய நிலக்கரி தூசு, எரி சாம்பல் போன்றவை காற்றை மாசுபடுத்துகின்றன. இவை சாம்பல் குவிப்பு, சாம்பல் குழாய்கள், சாம்பல் சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றில் இருந்தே வெளியேறுகின்றன.

ஐ.டி.பி.சி.எல் நடத்தி வரும் அனல்மின் நிலையத்திற்கு அருகில் இரண்டு கிராமங்களில் 5 இடங்களில் எடுக்கப்பட்ட நீர், ஒரு இடத்தில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளில் 3 இடங்கள் தீவிரமான மாசடைந்திருந்தன. 2 இடங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாசடைந்திருந்தன. மண் மாதிரியில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 30 மடங்கு அதிகமாக போரான் இருந்தது. இந்த போரான் அருகிலுள்ள அனல்மின் நிலையத்திலிருந்து வந்திருக்கவே வாய்ப்புகள் அதிகமுள்ளன. இது அம்மண்ணை விவசாயத்திற்குப் பயன்படாததாக மாற்றியுள்ளது. புதுக்குப்பத்தில் பல மக்கள் சமைப்பதற்கும் குடிப்பதற்கும் காசு கொடுத்து நீரை வாங்குகின்றனர்.

மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் பலரும் விவசாயத்தைக் கைவிட்டு வேறு தொழிலுக்கு மாறியது தெரிய வந்தது. நீர் மாதிரியில் புளூரைடு, இரும்பு, கால்சியம், மெக்னீசியம், சிலிகான், கடினத்தன்மை, காரத்தன்மை, TDS, குளோரைடு போன்றவை அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருந்ததும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

பாரம்பரியமாக கடலுக்குள் செல்ல மீனவர்கள் பயன்படுத்தி வந்தப் பாதையை அனல்மின் நிலையம் பயன்படுத்துவதால் மீனவர்களால் அப்பாதையை உபயோகிக்க முடியவில்லை. படகுகளை கரையேற்றுவதற்கும் கடலில் இறக்குவதற்கும் கனரக வாகனங்களைப் பயன்படுத்துவதால் செலவு அதிகரிக்கிறது. சில சமயம் படகுகள் சேதமடைகின்றன. மீன்பிடிப்பும் குறைந்துள்ளது. முன்பு ஒரு மீன்பிடியில் ரூ.1500 முதல் ரூ.2000 வரை கிடைத்த நிலையில், இப்போது ரூ.300-400 மட்டுமே கிடைக்கிறதாக மீனவர்கள் கூறினர்.

## பரிந்துரைகள்

**நெய்வேலி**

1. என்.எல்.சி. தனது கழிவு வெளியேற்றங்களால் நீர், மண் மாசுபடுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் இதைக் கண்காணித்து, மாசுபாடு தொடர்ந்தால் மின் நிலையங்கள்/ சுரங்கங்களுக்கு எதிராக அபராதம் மற்றும் ஆலை செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
2. என்.எல்.சி.யின் முக்கிய அதிகாரிகள், பிரதிநிதிகள் / தலைவர்களைக் கொண்ட முறையான மற்றும் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட குழு அந்தந்த திட்டங்களுக்கு அருகிலுள்ள கிராமங்களின் கிராம பஞ்சாயத்துகள், பிரதிநிதிகளுடன் குடிமைச் சமூகக் குழுக்கள் மற்றும் சுயாதீன நிபுணர்களுடன் அமைக்கப்பட வேண்டும். இக்குழு மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மேற்பார்வையில் செயல்பட்டு உடனடி மற்றும் நீண்டகாலத் தீர்வுகளை உருவாக்க வேண்டும்.
3. சுற்றுச்சூழல் பாதிப்பு, மக்கள் வாழ்வாதாரம் மற்றும் மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் இழப்பீடு தொடர்பான விரிவான மதிப்பீடுகள் நடத்தப்பட வேண்டும். பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் தணிப்பு மற்றும் மேம்பாடு குறித்தும் மதிப்பீடு செய்ய வேண்டும். மாசு கட்டுப்பாடு வாரியம், ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம், கண்காணிப்புக் குழு ஆகியோரையும் உள்ளடக்கிய ஒரு தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட வேண்டும், இக்குழுவானது பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை நிர்ணயம் செய்து அது வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
4. என்.எல்.சி.க்கு நிலம் கொடுத்தவர்கள் இடம்பெயர்ந்த மக்களின் நிலுவையில் உள்ள பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.
5. நெய்வேலி பகுதியில் புதிதாகவோ விரிவாக்கமாகவோ அனல்மின் நிலையங்கள் மற்றும் சுரங்கங்கள் வரக்கூடாது. இது அப்பகுதியின் மாசு சுமை அதிகரிப்பதைக் குறைக்கும்.
6. மிகத் தீவிரமான மாசுபாட்டைக் குறைப்பதற்கு என்.எல்.சி. தவறியுள்ளதால் அப்பகுதி மக்கள் என்.எல்.சி. நிர்வாகம் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். ஆகவே ஒன்றிய அரசு என்.எல்.சி.யின் அனல்மின் நிலையங்கள் மற்றும் சுரங்கங்களை படிப்படியாக செயலிழக்கம் செய்து நிறுத்துவதற்கான தெளிவான பாதையை

உருவாக்க வேண்டும். தமிழ் நாடு அரசு 2030ஆம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ள நிலையில் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் என்.எல்.சியின் செயல்பாடுகளை செயலிழக்கம் செய்வதற்கான திட்டத்தை உருவாக்கலாம்.

**பரங்கிப்பேட்டை**

**மேலே இடம்பெற்றுள்ள முதல் மூன்று கோரிக்கைகளும் பரங்கிப்பேட்டைக்கும் பொருந்தும்.**

1. ஏற்கெனவே சுற்றுச்சூழல் அனுமதியில் வலியுறுத்தப்பட்டுள்ளபடி ஐ.டி.பி.சி.எல். அனல்மின் நிலையம் தொடர் கடல் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். இதன் அறிக்கை அனைவரும் அணுகும் வகையில் பொதுவெளியில் இருக்க வேண்டும்.
2. சுற்றுச்சூழல் அனுமதியில் கூறப்பட்டதுபோல அனல்மின் நிலையத்தால் பாதிப்படையும் கடல் பகுதியில் மீன்பிடிப்பு மீன்வளத்துறையால் உள்ளூர் மீனவர்களின் பங்களிப்போடு கண்காணிக்கப்பட வேண்டும். இதன் அறிக்கை அனைவரும் அணுகும் வகையில் பொதுவெளியில் இருக்க வேண்டும்.

**கருத்துகள்**

**கவிதா ரவி, அகிலாண்டகங்காபுரம்**

”என் மகனுக்கு மூன்று வயதாக இருந்தபோது மூக்கில் இருந்து இரத்தப்போக்கு தொடங்கியது, இப்போது 14 வயதிலும் அவர் தொடர்ந்து அவதிப்படுகிறார். நாங்கள் மருத்துவமனைக்குச் சென்றபோது, அவருக்கு தூசி ஒவ்வாமை இருப்பதாகவும், தங்களால் எதுவும் செய்ய முடியாதெனவும் கூறினார்கள். காற்றில் ஏதேனும் தூசி இருந்தால், அவர் உடனடியாக நோய்வாய்ப்படுகிறார் மற்றும் முழு துண்டும் சளி மற்றும் இரத்தத்தால் நனைந்து விடுகிறது. மருத்துவரிடம் சென்றால், இங்குள்ள காற்று மாசுபாடுதான் காரணம் என்கிறார்.

நெய்வேலி பகுதியில் உள்ள காற்று மாசு அவரது மூக்கின் உட்புற சவ்வுகளைத் தொந்தரவு செய்கின்றன, அந்தப் பகுதியை விட்டு வெளியேறுவதே ஒரே தீர்வு

என்கிறார். ஆனால், எங்களால் அப்படி வெளியேற முடியாது. இங்குள்ள எல்லா குழந்தைகளும் மூச்சுத்திணறலால் அவதியுறுகின்றனர். ஒரு கிராமத்து வாழ்க்கையை வாழவே இங்கு தங்கியுள்ளோம்; ஆனால், கிராமத்து வாழ்க்கையின் சுத்தமான காற்று, அமைதி, சுகாதாரமான குடிநீர் எங்கள் வாழ்க்கையில் இல்லை".

**அன்னக்கிளி சிங்காரவேல், வடக்குவெள்ளூர்.**

எனது கணவர் சிறுநீரக பாதிப்பால் 5 மாதங்களுக்கு முன்பு உயிரிழந்தார். திடீரென அவரது மரணம் நிகழ்ந்தது. ஒரு நாள் வலி இருப்பதாகக் கூறினார் அதிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக அவர் இறந்துவிட்டார். அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது எந்தப் பகுதியில் இருந்து வருகிறீர்கள் எனக் கேட்டனர். நெய்வேலிக்கு அருகே வடக்குவெள்ளூர் என நாங்கள் கூறினோம். எங்கள் பகுதியில் உள்ள நீரின் தரம் குறித்துக் கேட்டனர். குடிக்கவே முடியாதபடி இருக்கும் எனக் கூறினோம். மஞ்சள் நிறத்தில் துர்நாற்றத்துடன் தண்ணீர் இருக்கும். பழுப்பு நிலக்கரி சுரங்கத்தால் மாசடைந்த தண்ணீரைக் குடித்ததாலயே என் கணவர் நோய்வாய்ப்பட்டார் என மருத்துவர்கள் கூறினர். அவரது நிலைமை மிகவும் மோசமடைந்தது அவரை வீட்டுக்கே அழைத்துச் செல்லும்படி மருத்துவர்கள் கூறிவிட்டனர். வீட்டிற்கு வந்த மறுநாள் அவர் இறந்துவிட்டார். அவர் சுரங்கத்தில் தினக்கூலியாக வேலை பார்த்தார். அவர் மறைந்ததால் நான் இப்போது விவசாயக் கூலியாக வேலை பார்க்கிறேன். நான் உழைத்தால் மட்டுமே சாப்பிட முடியும்".

**கல்பனா ரவிச்சந்திரன், பழைய தாண்டவன்குப்பம்**

1956-ல் என்.எல்.சி இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 46 ஏக்கர் நிலத்தை என் தாத்தா கொடுத்தார். அவருக்கு ஏக்கருக்கு ரூ.100 கொடுக்கப்பட்டது, அதனுடன் ஒரு பண்ணை இருந்ததால் எங்களுக்கு இருந்த மற்றொரு நிலத்திற்கு குடிபெயர்ந்தோம். இப்போது எங்களிடம் 3 அல்லது 4 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது, அதையும் கேட்கிறார்கள். இந்தியாவின் வளர்ச்சிக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால், எங்கள் தேவைகளுக்கு என்ன செய்வது? அவர்கள் இந்த நிலத்தையும் அபகரித்து விட்டால் நாங்கள் என்ன செய்வோம்? எங்களுக்கு விவசாயத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. எங்களுடைய நிலத்தில் இவ்வளவு உள்கட்டமைப்பு வசதிகளை செய்துகொண்ட பிறகும் படித்த எங்கள் குழந்தைகளுக்கு வேலை கொடுப்பதில்லை. வேலை வழங்கினாலும், ஒப்பந்த வேலைகள் மட்டுமே, நிரந்தர வேலைகள் தருவதில்லை. இப்போது எங்கள் நிலத்தைக் கொடுத்தால் எங்கள்

பிள்ளைகளுக்கு மூன்று ஆண்டுகள் வேலை வாங்கித் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் எந்த நம்பிக்கையுடன் இதைச் செய்ய முடியும்? எங்களிடம் நிலம் இருக்கும்போது அவர்கள் எங்கள் பேச்சைக் கூட கேட்பதில்லை, இல்லையென்றால் என்ன நடக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்? ஏக்கருக்கு ரூ.25 லட்சம் தருகிறார்கள், ஆனால் அந்த தொகையைக் கொண்டு நாங்கள் வேறு எங்கும் நிலம் வாங்க முடியாது. எங்கள் நிலத்தை தர மறுக்கிறோம். வளர்ச்சி என்ற பெயரில் இந்த நிலங்களை எல்லாம் அபகரித்து விவசாயத்தை அழித்துக் கொண்டே இருந்தால் அடுத்த தலைமுறை என்ன சாப்பிடும்?”.